**கவனிக்க.**- 2006.04.21 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1443 - 2006 අප්‍රේල් 28 වැනි සිකුරාදා - 2006.04.28

1443 ஆம் இலக்கம் - 2006 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 368 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 368 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2006, மே 05 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2006, ஏப்பிறல் 21 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2006 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

ஐக்கிய இராச்சியம் Sw16 4UA லண்டன், நோர்பரி, டார்சி ரோட், இல. 78 இல் தற்போது குடியிருக்கும் நுகேகொடை, மிரிஹான, சொக்மன் பிளேஸ், இல. 115/4 ஐச் சேர்ந்த விதானகே தொன் அஜிதா பிரசாத் மஹதந்தில ஆகிய நான் நுகேகொடை, மிரிஹான, சொக்மன் பிளேஸ், இல. 115/4 ஐச் சேர்ந்த தோன தயா மாலினி மஹதந்திலவை நியமனம் செய்து பகிரங்க நொத்தாரிசு ஆர். பி. கே. ரூபசிங்ஹவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1999, ஏப்பிறல் 21 ஆந் திகதிய இல. 961 எனும் அட்டோர்ணித் தத்துவத்தை இன்று முதல் இரத்துச்செய்து செல்லுபடியற்றதாக்குகிறேன் எனவும் இன்று முதல் என் சார்பாக தோன தயா மஹதந்திலவினால் கையொப்பமிடப்படும் எந்த உறுதிகள் அல்லது உடன்படிக்கைகள் செல்லுபடியற்றதாகும் எனவும் இத்தால் அறிவித்துக்கொள்கிறேன்.

விதானகே தொன் அஜிதா பிரசாத் மஹதந்தில.

4-403/1

## அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

ஐக்கிய அமெரிக்க 07065 நிவ் ஜேர்சி டிரைவ் ராஹ்வே காமென்ஸ்கி இல. 816 இல் குடியிருக்கும் நுகேகொடை, மிரிஹான, சொக்மன் பிளேஸ், இல. 115/4 ஐச் சேர்ந்த விதானகே தோன கங்கா மஹதந்தில ஆகிய நான் நுகேகொடை, மிரிஹான, சொக்மன் பிளேஸ், இல. 115/4 ஐச் சேர்ந்த தோன தயா மாலினி மஹதந்திலவுக்கு வழங்கப்பட்ட பகிரங்க நொத்தாரிசு ஆர். பி. கே. ரூபசிங்ஹவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1999, யூலை 12 ஆந் திகதிய இல. 967 எனும் அட்டோர்ணித் தத்துவத்தை இன்று முதல் இரத்துச்செய்கிறேன் எனவும் இன்று முதல் என் சார்பாக தோன தயா மாலினி மஹதந்திலவினால் கையொப்பமிடப்படும் எந்த உடன்படிக்கை, உறுதிகள் செல்லுபடியற்றதாகும் எனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

விதானகே தோன கங்கா மஹேஸ்வரி ஜினதாச.

4-403/2

# ஏல விற்பனைகள்

## யூனியன் வங்கி லிமிட்டெட்

(பாகிஸ்தானில் சட்டரீதியாக இணைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் வரையறுக்கப்பட்ட கொழும்பு யூனியன் வங்கியினால் எடுக்கப்பட்ட தீர்மானம் பற்றிய அறவிடுதல்

**ஒரு பெறுமதிவாய்ந்த சொத்துக்கான ஏல விற்பனை**

**மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் வட்டாரம் இலக்கம் 05, லுனுபொகுன, கொட்டாஞ்சேனை, அல்விஸ் பிளேஸ், இல. 47-அனுமதிபெற்ற அளவையாளர் மு. கிட்ணபிள்ளை என்பவரால் தயாரிக்கப்பட்ட 1979, ஏப்பிறல் 4 ஆந் திகதிய, 2527 ஆம் இலக்கம் கொண்ட வரைபடத்தில் லொட் இல. 01 என குறிப்பிடப்பட்ட பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு (அங்குள்ள 2 மாடிக் கட்டிடம், பயிர்கள் மற்றும் யாவும் உட்பட)**

**(விஸ்தீரணம் : 0 ஏ. 0றூ. 10.4780பே.)**

வர்த்தக நாமங்களுக்கான சட்டவிதிகளுக்கு அமைய 60236 ஆம் இலக்க சான்றிதழின்கீழ் பதியப்பட்ட லங்கா புரடியூஸ் ஏஜென்சீஸ் என்ற பெயர் மகுடத்தின்கீழ் கொழும்பு 12, டாம் வீதி, 155/1 ஆம் இலக்க ஸ்தானத்தில் பங்குதாரர்களாக வர்த்தகம் நடத்திவரும் தம்பு செல்வரத்னம் மற்றும் ஜயலெச்சுமி செல்வரத்னம் ஆகியோர்களால் சொத்து யூனியன் வங்கி லிமிட்டெட்டில் அடகு வைக்கப்பட்டது. கொழும்பு பகிரங்க நொத்தாரிசு ஆறுமுகம் தவநேசன் என்பவரால் உறுதிப்படுத்தப்பட்ட 1995, ஒற்றோபர் 18 ஆந் திகதிய 7339 ஆம் இலக்கம் கொண்ட மற்றும் 1994, ஓகத்து 3 ஆந் திகதிய 6964 ஆம் இலக்கம் கொண்ட மற்றும் 1991, சனவரி 30 ஆந் திகதிய 5611 ஆம் இலக்கம் கொண்ட மற்றும் 1988, செத்தெம்பர் 30 ஆந் திகதிய 3927 ஆம் இலக்கம் கொண்ட அடகு பிணைகளின்மேல் அடகு வைத்தவர்களான தம்பு செல்வரத்னம் மற்றும் ஜயலெச்சுமி செல்வரத்தினம் (கூறப்பட்ட ஜெயலெச்சுமி செல்வரத்தினம் தனது கணவரான தம்பு செல்வரத்தினத்தின் அனுமதியுடன் இணைந்து செயலாற்றுகிறார்) ஆகியோர் கட்டணம் செலுத்தத் தவறியுள்ளனர்.

யூனியன் வங்கி லிமிட்டெட்டால் (பாகிஸ்தானில் சட்டரீதியாக இணைக்கப்பட்டது) எமக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் 2006, மே 18 ஆந் திகதி வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**கட்டணம் செலுத்தும் முறை.**- வெற்றிகரமான கொள்வனவாளர் ஏலத்தின் முடிவில் பின்வரும் கட்டணங்களை காசாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 25% ;

(2) கொள்வனவு விலையின் மிகுதி 75% விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் ;

(3) உள்ளூராட்சி அதிகாரசபைக்குச் செலுத்தவேண்டிய உள்ளூர் அதிகாரசபை வரி 1% ;

(4) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2 1/2% (இரண்டரை வீதம்) ;

(5) ரூ. 40,000 க்கு மேற்படாத மொத்த விளம்பரச் செலவுகளின் 50% ;

(6) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூ. 500 ;

(7) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு கட்டணம் ரூ. 2,000.

**தீர்மான அறிவித்தல்களுக்கு.**- 2006.01.27 ஆந் திகதிய "டெயிலி நியூஸ்", "தினமின", "தினகரன்" புதினப் பத்திரிகைகளையும் 2006.03.03 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானப் பத்திரிகைகளையும் பார்க்கவும்.

மேலதிக விபரங்களுக்கும், காணி உறுதி மற்றும் ஆவணங்களையும் "கொழும்பு 07, தர்மபால மாவத்தை, 245, யூனியன் வங்கி லிமிட்டெட் (பாக்கிஸ்தானில் சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது). கடன் நிர்வாக உத்தியோகத்தர்" இடம் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. 2679000-5.

ஷொக்மன் அன்ட் சமரவிக்கிரம,
இலங்கையின் அரசாங்க மற்றும்
நீதிமன்றங்களினால் அங்கீகரிக்கப்பட்ட,
பிரசித்திபெற்ற முன்னோடி பட்டய ஏலதாரர்களும்
மதிப்பீட்டாளர்களும் .

*நகர அலுவலகம்*
55ஏ, தர்மபால மாவத்தை,
கொழும்பு 3,
தொலைபேசி : 011-2448526,
011-2441761
074-714999
தொலைநகல் : 011-2448526
011-2575214
மின் அஞ்சல் :
samera@sri.lanka.net

*தலைமை அலுவலகம்*
24, டொரிங்ரன் வீதி,
கண்டி.
தொலைபேசி : 081-2224371
081-2227593
தொலைநகல் : 081-2224371
மின் அஞ்சல் :
samera@diamond.lanka.net

4-377

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.